**இலங்கை இளையோர் விஞ்ஞான ஒலிம்பியட் போட்டிக்கு பதிவு செய்வதற்கான விதிமுறைகள்-2025**

- போட்டி நடைபெறும் வருடத்தில் அதாவது மார்கழி 31ம் நாளில் உங்களுடைய வயது 16ற்கு குறைவு என்பதனை உறுதி செய்தல் வேண்டும்.
- பதிவு செய்வதற்கான பதிவுக் கட்டணமாக (ரூபா 3000.00) ஐ கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கணக்கிலக்கத்திற்கு வைப்பு செய்து அதற்கான பற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ளவும்.

  கணக்கின் பெயர்: இலங்கை இளையோர் விஞ்ஞான ஒலிம்பியட்

  வங்கி: இலங்கை வங்கி

  கிளை: ரொறிங்டன் சதுக்கம்

  கணக்கிலக்கம்: 78341015

  **Take a Photo of the payment slip and save in JPEG format. You must upload this.**
  **கட்டணச் சீட்டின் புகைப்படத்தை எடுத்து JPEG வடிவத்தில் சேமிக்கவும். இதை நீங்கள் பதிவேற்ற வேண்டும்.**

- பௌதிகவியல் நிறுவனத்தினுடைய வலைத்தளமான (www.sljso.lk) இற்குள் உட்பிரவேசித்து இலங்கை இளையோர் விஞ்ஞான ஒலிம்பியட் எனும் இணைப்பை தெரிவு செய்வதன் மூலம் கீழ் காணப்படும் இணையவழி விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து அனுப்ப முடியும்.

  **விண்ணப்பதாரியின் பெயர்**: உங்களுடைய முழுப் பெயரைப் பதிவு செய்யவும்

  **முதலெழுத்துக்களுடன் பெயர்**: முதலெழுத்துக்களுடன் உங்களுடைய பெயரைப் பதிவு செய்யவும்

  **முகவரி**: உங்களுடைய முகவரியினைப் பதிவு செய்யவும்

  **பால்**: ஆண் அல்லது பெண் என்பதை தெரிவு செய்யவும்

  **பிறந்த திகதி**: பிறந்த திகதியை கீழ்க் காணப்படும் இலக்கங்களில் நாட்காட்டியில் இருந்து தெரிவு செய்யவும். நீங்கள் பிறந்த ஆண்டு கீழ்க் காணப்படும் நாட்குறிப்பேட்டில் காணப்படவில்லையாயின் நீங்கள் இந்த போட்டிக்கு பதிவு செய்வதற்கு தகுதி அற்றவர் என்பது பொருள்படும்.

  **பரீட்சை நிலையம்**: உங்களுக்கு மிகவும் சௌகரியமான பரீட்சை நிலையத்தை தெரிவு செய்யவும். பரீட்சை நிலையங்களின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**தொடர்பு இலக்கம்**: உங்களுடைய கைத்தொலைபேசி இலக்கத்தை குறிப்பிடவும். (கட்டாயமானது)

**மின்னஞ்சல்**: இது கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றல்ல. உங்களுக்கு மின்னஞ்சல் முகவரி காணப்படுமாயின் அதனை குறிப்பிடவும்.
(Please note to enter an e-mail address) .
**மொழி ஊடகம்**: கற்கை மொழியை தெரிவு செய்யவும்.

நீங்கள் பூர்த்தி செய்த அனைத்து பகுதிகளையும் கவனமாக மீள் பரிசீலனை செய்யவும். அதன் பிற்பாடு "**தயவு செய்து உறுதி செய்யவும்**" என்ற இணைப்பை அழுத்தவும்.

- உங்களுடைய விண்ணப்படிவத்தை பூர்த்தி செய்து அனுப்பியதன் பின்னர் பரீட்சை நுளைவுப் படிவத்தை அவதானிக்க முடியும். உங்களுடைய பரீட்சை நுளைவு படிவத்தை பிரதி செய்து பயண அனுமதிப்பத்திர (Passport size) அளவு புகைப்படத்தை அனுமதிப்பத்திரத்தின் மேல் ஒட்டவும். அத்துடன் பணம் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டையும் அதற்கென குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் இணைக்கவும்.

- உங்களை உறுதிப்படுத்துவதற்கான உங்களுடைய கையெழுத்தினை கீழ் வரும் நபர்களின் பிரசன்னத்தில் இட்டு அதனை உறுதிப்படுத்தவும்.

  **பாடசாலை அதிபர்/உபஅதிபர், சமாதான நீதவான், மதத் தலைவர்கள் ( விகாரைகள், தேவாலயங்கள் அல்லது பள்ளிவாசல்கள்), அரசாங்க ஊழியர்கள்**

- நீங்கள் பரீட்சைக்கு சமூகம் தரும்போது பூர்த்தி செய்யப்பட்ட பரீட்சை அனுமதிப் பத்திரத்தை பரீட்சை நிலையத்திற்கு கொண்டு வருதல் கட்டாயமாகும். தகுந்த பரீட்சை அனுமதிப் பத்திரத்தை உறுதிப்படுத்தாத எந்த பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

- **பரீட்சைக்கான குறிப்பிடப்பட்ட திகதி ஏதாவது தவிர்க்க முடியாத காரணங்களிற்காக இரத்து செய்யப்படுமாயின் பரீட்சாத்திகள் தனிப்பட்ட ரீதியில் பரீட்சைக்கான புதிய நாள் பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்ளமாட்டர்கள். புதிய பரீட்சை நாள் தொடர்பான இதர தகவல்கள் SLJSO வலைத்தளத்தில் அறிவிக்கப்படும். கல்லூரிகள், பாடசாலைகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பரீட்சாத்திகள் SLJSO வலைத்தளத்தை பார்வையிடுமாறு வினயமாக வேண்டப்படுகிறீர்கள். பரீட்சைக்கு முதலில் வழங்கப்பட்ட**

**பரீட்சை அனுமதிப் பத்திரத்தை மீள் பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் பயன்படுத்த முடியும்.**

- விண்ணப்பதாரியின் எந்தவொரு அசமந்தப் போக்கின் காரணமாகவும் பரீட்சைக்கு செலுத்தப்பட்ட பணம் மீளளிப்பு செய்யப்படமாட்டாது.
- இந்த போட்டி தொடர்பான சகல விடயங்களிற்கும் SLJSO பேரவையின் தீர்மானமானது இறுதித் தீர்மானமாகும்.

**பரீட்சை நிலையங்கள்**

| | |
|---|---|
| University of Colombo | Wayamba University- Kuliyapitiya |
| University of Kelaniya | Open University Regional Center-Kandy |
| University of Sri Jayawardanepura | Jaffna University |
| University of Ruhuna | Open University Regional Center- Batticaloa- |
| Vavuniya University- Pampaimadu | Uwa Wellasa University |